மேலூர் நகராட்சியில் நேர்மையான, திறமையான குமரேசன் என்கிற அதிகாரி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைக்காக மாற்றப்பட்டு இருக்கிறார். ஒரு நேர்மையான அதிகாரியை இந்த அரசு மாற்றியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளரும் நகரச் செயலாளரும் இதிலே ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த அதிகாரி இப்போது stay வாங்கியிருக்கிறார். அப்படி இருந்தும், அவர் இன்னும் பணியிலே அமர்த்தப்படவில்லை. இந்த அராஜகத்தைக் கைவிட்டு, உடனடியாக அவர் பணி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு ஒன்றியம், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய பேச்சை முடியுங்கள். தண்டராம்பட்டுக்காரருக்கு நான் அனுமதி கொடுக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. வெ. சின்னய்யா: இப்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் மிக அவசியம். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூடுவதற்கு மீண்டும் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்

உறுப்பினர்களுக்கு நண்பகல் உணவு மற்றும் தேநீர் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாமக்கல் கவிஞர் மாளிகையில், 10-வது மாடியில் உள்ள உணவுக் கூடத்தில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்றைக்கு நண்பகல் உணவு வழங்கவும், பிற்பகல் 4-00 மணி முதல் 4-30 மணி வரை பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பிளாசாவில் தேநீர் , வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.